**DEPOSITION OF WITNESS**

( Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF -CUM-JUDICIAL MAGISTRATE,

KILPENNATHUR.

| | |
|---|---|
| Calender | Case No. : STC– 147/2025 (/20) |
| Deposition of witness for | Prosecution : LW 8 – PW 8 |
| | Defence : |
| | Court : |
| Name : கிறிஸ்டி ஜெயமுருகன் | Father's Name: |
| | Husband Name: |
| | Taluk : |
| Village/Town : சோழிங்கநல்லூர் | Calling : உதவி மருத்துவ கண்காணிப்பாளர் |
| Mail ID : | Age : 50 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22.05.2026

**எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.317ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை :**

நான் தற்போது சோழிங்க நல்லூர் அரசு புறநகர் மருத்துவமனையில் உதவி கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 05.12.2021ம் தேதியன்று திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவசர பிரிவு மருத்துவராக மாலை 06.40 மணியளவில் பணியில் இருந்த போது கார்த்திக், வயது –32, த/பெ.குமரவேல் என்பவர் இருசக்கர வாகனத்தில் சென்ற போது எதிரில் வந்த இருசக்கர வாகனத்தில் விபத்து ஏற்பட்டு காயமடைந்ததாக அதே நாள் 05.12.2021 மாலை 06.00 மணியளவில் கீழ்பென்னாத்தூர் ஏரிக்கரை அருகில் காயமடைந்ததாக என்னிடம் சிகிச்சைக்கு அவரது மனைவி

அழைத்து வந்தார். நான் அவரை பரிசோதித்த போது சுயநினைவில் இருந்தார். அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது. 1) வலது கையில் 3 x 2x 1 செ.மீ. அளவுள்ள கிழிந்த காயமும், 2) வலது ஆள்காட்டி விரலில் 3 x 2x 1 செ.மீ. அளவில் கிழிந்த காயமும், 3) வலது காலில் சிராய்ப்பு காயம் 2x 2 செ.மீ அளவு, 4) மூக்கில் ரத்தம் வழிந்திருந்தது, 5) இடது கண் புருவத்தில் 3 x 2x 1 செ.மீ. அளவு கிழிந்த காயம், 6) வலது தொடையில் 4x 3x 2 செ.மீ. அளவுள்ள கிழிந்த காயம், 7) வலது கால் பாதத்தில் பெருவிரல் கிழிந்து தொங்கிய நிலையிலும், பாதத்தின் தோல் 8 x 4x 5 செ.மீ அளவில் கிழிந்து தொங்கிய நிலையில் காணப்பட்டது. அவரை உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதித்திருந்தேன். ஆனால், அவர் உள்நோயாளியாக சிகிச்சைப் பெற விருப்பம் இல்லாமல் வெளியில் சிகிச்சை பெறுவதற்காக சென்றுவிட்டார். மேலும், அவர் Command Hospital air force, பெங்களுரு என்ற இடத்தில் சிகிச்சைப் பெற்றதற்கான மருத்துவ சிகிச்சை முடிவு அறிக்கை (Discharge summary) சமர்ப்பித்தார். அதில் அவரது அனைத்து கை எலும்பு மூட்டுகள் (Carpometacarpal) விலகியதாகவும் வலது காலில் பெருவிரல் பாதி துண்டிக்கப்பட்டதாகவும், தலையின் மண்டை ஒட்டின் முன்பகுதி எலும்பு முறிவு ஏற்பட்டதாகவும், கொடுக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் 1, 2, 4 மற்றும் 7 ஆகியவை கொடுங்காயம் என்றும், 3, 5 மற்றும் 6 சொற்பகாயங்கள் என்றும் சான்று வழங்கியுள்ளேன். நான் வழங்கிய விபத்துப்பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று **அ.சா.ஆ.6** ஆகும். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>**எதிரித்தரப்பில் குறுக்குவிசாரணை**</u>

நான் சிகிச்சை அளித்த நோயாளி என்னிடம் விபத்து மாலை 05.00 அளவில் ஏற்பட்டது என்று சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி நோயாளி எத்தனை மணிக்கு வெளியேறினார் என்று எனக்கு தெரியுமா என்றால் நிறைய நோயாளிகள் இருந்ததால் அவர் எத்தனை மணிக்கு சென்றார் என்று என்னால் கவனிக்க முடியவில்லை. பெங்களூர் மருத்துவமனையில் யார் சிகிச்சை அளித்தார்கள், எவ்வளவு நாள் மருத்துவமனையில் இருந்தார் மற்றும் எந்தவகையான சிகிச்சை அளிக்கப்பட்டது என்று விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி நபரை மீண்டும் நான் நேரடியாக பார்த்து மேற்படி காயக்கருத்துரை வழங்கவில்லை என்றால் சரிதான். மேற்படி காயம்பட்ட நபரை நுண்கதிர் படங்கள் ஏதும் எடுக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி நபரின் நுண்கதிர் படங்கள் ஏதும் பெங்களூரு மருத்துவமனையில் எடுத்தாக என்னிடம் காண்பிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி பெங்களூரு மருத்துவமனையில் எந்த தேதியில் சிகிச்சைக்கு சேர்ந்து எந்த தேதியில் வெளியேறினார் என்று காயச்சான்று கருத்துரையில் நான் எழுதவில்லை என்றால் சரிதான். நான் பரிசோதித்த நபருக்கு ஏற்பட்டுள்ள காயங்கள் இருசக்கர வாகனத்தில் அதிவேகமாக சென்று சறுக்கி கீழே வலதுபுறமாக விழும் போது நான் காயச்சான்றில் குறிப்பிட்டுள்ள காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் உள்ளது.

(அ.சா.8 மருத்துவரின் சாட்சியம் காணொளி காட்சியின் மூலம் பதிவுசெய்யப்பட்டது)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.
sd/-( M.C.Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்